TNPL

# தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்

காகிதபுரம், கரூர்

# வனத்தோட்ட மலர்

காடு வளர்போம் ! காகிதம் செய்வோம் ! கற்றலை ஊக்குவிப்போம் !

பதிப்பு - அக்டோபர் 2019 மலர் - 2

## முகவுரை

அன்பார்ந்த விவசாயிகளே,

நம் வனத்தோட்ட மலரின் முதல் பதிப்பானது தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து விவசாயிகளும் பயனடையும் வகையில் 2019 ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்டது. நமது தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் முதலாவது வனத்தோட்ட மலருக்கு மிகப்பெரிய வரவேற்பை அளித்த அனைத்து விவசாய பெருமக்களுக்கும் இந்த மலர் மூலம் நன்றியுடன் சேர்ந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறது வனத்தோட்டத்துறை.

இந்த மலருக்கு விவசாயிகளினால் வழங்கப்பட்ட வரவேற்பானது எங்களை மேலும் சிறப்பாக பணியாற்ற ஊக்குவிக்கின்றது.

நமது வனத்தோட்ட மலரின் இரண்டாம் பதிப்பில் நீர் மேலாண்மையில் வேளாண்காடுகளின் பங்கு மற்றும் முக்கியத்துவம் பற்றியும், மானாவாரி சவுக்கு வளர்ப்பு பற்றியும், விவசாயிகளின் மேம்பாட்டில் அரசு நிறுவனத்துடன் நமது நிறுவனம் இணைந்து செயல்படுத்தும் திட்டங்கள் பற்றியும் தங்களிடம் பகிர்ந்து கொள்வதில் நாங்கள் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். மேலும் இந்த மலரை மென்மேலும் மேம்படுத்தவும் தங்களின் மேலான ஆதரவும், ஆலோசனைகளும், கருத்துக்களும் வரவேற்கப்படுகிறது.

தங்களின் கருத்துகளையும், ஆலோசனைகளையும் மற்றும் மரச்சாகுபடி அனுபவங்களையும் புகைப்படமாகவும், குரல்வழிச் செய்தியாகவும் எங்களிடம் கீழ்கண்ட மின்னஞ்சல் மற்றும் வாட்ஸ்அப் எண்ணில் பதிவு செய்ய வேண்டுகிறோம்.

மின்னஞ்சல் - plantation@tnpl.co.in

வாட்ஸ்அப் எண் - 9442591419. டி.என்.பி.ல். வனத்தோட்டத்துறை

## நீர் மேலாண்மையில் வேளாண்காடுகளின் பங்கு

ஆதி மனிதனின் முதல் தொழில் வேட்டையாடுதலும், மீன்பிடித்தலுமேயாகும். தொடக்க நிலையில் உணவிற்காக வேட்டையாடுதலுடன் காய், கனி, கிழங்கு இவற்றை தேடி அலைந்து வேகவைத்து உண்ணத்தொடங்கினான். பின் படிப்படியாக இயற்கை வேளாண்மை செய்ய தள்ளப்பட்டான். காடுகளுக்கிடையேயும், மலையடிவாரங்களிலும் நிலத்தைச் சீர்படுத்தி காடுகளுக்கிடையில் நடந்த வேளாண்மை காடுகளுடன் வேளாண்மை என்ற நிலை அடைந்தது. மனித சமுதாய மேம்பாட்டின் விளைவாக சமூகங்களும், கிராமங்களும் தோன்றிய பின்னர் சிறிது சிறிதாக காடுகள் மறையத்தொடங்கின. ஆனால் கிராமங்களில் மரங்கள் நிறைந்திருந்தன. இதன் பின்னர் காடுகளுடன் வேளாண்மை என்ற நிலை மாறி மரங்களுடன் வேளாண்மை என்ற நிலை வந்தது. கடந்த பல ஆண்டுகளாக மரங்களும் பெருமளவில் அழிக்கப்பட்டு நகரங்களும் தொழிற்சாலைகளும் உருவாகின. அதனால் மரங்கள் குறைந்து வேளாண்மை மட்டும் தொடர்ந்தது. பின்னர் அதுவே வேதி வேளாண்மையானது. கால்நடை வளர்ப்பும் குறைந்தது.

காடுகள், மரங்கள், கால்நடைகள் இழப்பினால் பருவநிலை மாற்றமும் அதனால் வேளாண்மையும் பெருமளவில் நலிய தொடங்கியது. இந்தியாவிலுள்ள அனைத்து முக்கிய நதிகளும் கடந்த 70 வருடங்களில் சுமார் 40 விழுக்காடு அளவிற்கு மறைந்துள்ளன. நமது தமிழகத்தின் ஜீவநதியான காவேரியும் கடந்த வருடங்களில் பல மாதங்களாக நீரின்றி வறண்ட நிலையில் இருந்துள்ளது. இத்தகைய நிலைகளுக்கு காரணம் மழையின் அளவு குறைந்தது மட்டுமின்றி பெறப்பட்ட மழைநீரினை நாம் சேமித்து வைக்காததும் ஒரு காரணமாகும். இவற்றை களைந்து வேளாண்மையை மீட்டெடுக்கவும் 33% வனப்பரப்பை எட்டி மழையளவை பெருக்கவும் இன்று அறிவியல் எடுத்த நிலைப்பாடே வேளாண்காடுகள் ஆகும்.

# வேளாண்காடுகள்

வேளாண்பயிர் உற்பத்தி + மரம் வளர்ப்பு = வேளாண்காடுகள்

வேளாண்காடுகள் என்பது பாரம்பரிய வேளாண்மையுடன் மரப்பயிரினையும் சேர்த்து வளர்ப்பதே ஆகும். விவசாயிகள் மரப்பயிரினை தேர்வு செய்யும் போது அந்த பகுதியில் நிலவும் தட்பவெப்பநிலை, மண்வளம், மரப்பயிரின் வளர்ச்சிக்காலம் மற்றும் சந்தை வாய்ப்புகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் விரைவான வளர்ச்சியையும், நிரந்தர சந்தை வாய்ப்பினையும் உடைய சவுக்கு, தைலம், சூபாபுல், மலைவேம்பு மற்றும் குமிழ்தேக்கு போன்ற கூழ்மரங்களை விவசாயிகள் தமிழகம் முழுவதும் பரவலாக பயிர் செய்து வருகின்றனர். இதற்கு தேவையான தரமான மரக்கன்றுகள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது.

பருவமழை பொய்த்தல் மற்றும் நீர் பற்றாக்குறையின் காரணமாக விவசாயிகள் மாற்று பயிராக கூழ்மரப் பயிரினை விவசாயத்தின் ஓர் அங்கமாக தேர்வு செய்கின்றனர். வேளாண்காடு வளர்ப்பு முறையில் முறையான நீர் மேலாண்மையின் மூலம் கூழ்மரப்பயிர்களுடன் ஊடுபயிராக விவசாயப்பயிரினையும், விவசாயப்பயிர்களுடன் ஊடுபயிராக கூழ்மரப்பயிர்களையும் பயிர் செய்து இரட்டிப்பு வருமானம் அடைய இயலும். மேலும் இயற்கை காடுகள் அல்லாத நிலங்களில் உருவாக்கப்படும் வனத்தின் மூலம் (கூழ்மரத்தோட்டங்கள்) மழை அளவை பெருக்கி சுற்றுசூழலை மேம்படுத்த இயலும்.

விவசாயிகள் கூழ்மரங்களுக்கு இடையில் ஊடுபயிராக கீழ்கண்ட விவசாய பயிர்களை பயிர் செய்யலாம்.

| | | |
|---|---|---|
| 1. காய்கறி வகைகள் | – | வெங்காயம், கத்தரி, முள்ளங்கி மற்றும் சேனைகிழங்கு |
| 2. எண்ணெய் வித்துக்கள் | – | நிலக்கடலை, எள் மற்றும் சூரியகாந்தி |
| 3. பணப்பயிர்கள் | – | மரவள்ளி, பருத்தி மற்றும் வாழை |
| 4. தீவணப்பயிர்கள் | – | கோ–4, கோ–5, தீவணப்புல் |

விவசாயிகள் தைலம் மற்றும் மலைவேம்பு கூழ்மரங்களுக்கிடையில் இரண்டு வருட காலத்திற்கும், சவுக்கு கூழ்மரங்களுக்கு இடையில் ஒரு வருட காலத்திற்கும், விவசாய பயிர்களை ஊடுபயிராக வளர்த்து அதிகப்படியான இலாபம் அடையலாம்.



சவுக்கு கூழ்மர வனத்தோட்டத்தில் ஊடுபயிராக வாழை சாகுபடி



சவுக்கு கூழ்மர வனத்தேட்டத்தில் ஊடுபயிராக நிலக்கடலை சாகுபடி



தைல கூழ்மர வனத்தோட்டத்தில் ஊடுபயிராக வெங்காயம் சாகுபடி



தைல கூழ்மர வனத்தோட்டத்தில் ஊடுபயிராக மரவள்ளி சாகுபடி

# வேளாண்காடுகளின் பயன்கள்

- விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கிறது.
- மண்வளத்தினை பாதுகாக்கிறது.
- நீர் மேலாண்மையில் முக்கிய பங்கு ஆற்றுகின்றது.
- ஒருங்கிணைந்த பண்ணை வளர்ப்பு திட்டத்தில் முக்கிய பங்காற்றுகிறது.
- பசுந்தீவன தேவையை பூர்த்தி செய்கின்றது.
- இயற்கை காடுகள் அல்லாத நிலத்தில் வனப்பரப்பை அதிகப்படுத்துகின்றது.
- பல்லுயிர் பாதுகாக்கப்படுகிறது
- புவி வெப்பமயமாதலை தடுக்கின்றது.

## வேளாண்காடுகள் உற்பத்தியில் டி.என்.பி.எல் வனத்தோட்டத்துறை

இன்றைய விவசாயம் அருகி வரும் சூழ்நிலையில், மரப்பயிர்களுடன் சார்ந்த வேளாண்மை மட்டுமே விவசாயிகளுக்கு பயன் அளிக்க இயலும். இத்தகைய கூற்றுக்கு இணங்க டி.என்.பி.எல். நிறுவனத்தின் வனத்தோட்டத்துறை அரசு மற்றும் அரசு சாரா தனியார் நிலங்களில் வேளாண்காடுகள் வளர்ப்பு மற்றும் பராமரிப்பு பற்றியும், இதை சார்ந்த திட்டங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு தக்க ஆலோசனைகளை வழங்கி வருகின்றது.

திருச்சியில் உள்ள அன்பில் தர்மலிங்கம் விவசாய கல்லூரியில், செப்டம்பர் 13 மற்றும் 14 ஆம் தேதி நடைபெற்ற வேளாண் கருத்தரங்கில் டி.என்.பி.எல். வனத்தோட்டத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டு வேளாண்காடுகள் உருவாக்கும் வழிமுறைகளையும், நீர் மேலாண்மையின் முக்கியத்துவத்தையும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் வம்பனில் அமைந்துள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் வேளாண் அறிவியல் மையத்தில் மே மாதம் 3 ஆம் தேதி வேளாண்காடுகள் விரிவாக்கம் என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் டி.என்.பி.எல். நிறுவன அதிகாரிகளும், வேளாண் மைய நிர்வாகிகளும் கலந்து கொண்டு வேளாண் காடுகள் பயன்கள் பற்றி விரிவாக எடுத்து உரைத்தனர்.





## மானாவாரியில் மகசூல் தரும் ஜுங்குனியான சவுக்கு

சவுக்கு மரம் என்றாலே நமக்கு நினைவுக்கு வருவது நீர்பாசனம் மட்டுமே. ஆனால் சவுக்கு மரப்பயிரையும் நம்மால் மானாவாரியில் பயிர் செய்ய இயலும். ஆம் ஜூங்குனியானா சவுக்கு இரகம் (CJ1) ஆனது மானாவாரியிலும் நன்றாக வளரக்கூடியது.

காலநிலை மாற்றத்தால் உலகில் பல இடங்கள் பாலைவனங்களாக காட்சியளிக்கின்றன. கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் நம் இந்திய நாட்டில் வறண்ட சூழ்நிலையே நிலவி வருகிறது. இதனால் குளங்கள், குட்டை, ஏரி, கிணறு மற்றும் ஆள்துளை கிணறுகள் நீரின்றி வற்றி விட்டன. இந்த தருணத்தில் ஆண்டுக்கு சுமார் 600–800 மி.மீ மழை அளவுள்ள பகுதிகளில் முக்கியமாக கடலோர மாவட்டங்களில் மானாவாரியில் சவுக்கு சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகளுக்கு ஜூங்குனியானா சவுக்கு ஓர் வரப்பிரசாதமாக விளங்குகிறது.

விழுப்புரம், கடலூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் ஜூங்குனியானா சவுக்கினை (CJ1) கடந்த 10 ஆண்டுகளாக மானாவாரி நிலங்களில் நடவு செய்து வருகின்றனர். வருடத்திற்கு சுமார் 2000 ஏக்கர் அளவிற்கு சாகுபடி நடைபெறுகிறது. இம்மானாவாரி சவுக்கானது ஏக்கருக்கு சுமார் 40 முதல் 60 மெட்ரிக் டன் வரை மகசூல் தரக்கூடியது.

## மானாவாரி சவுக்கு சாகுபடி குறிப்புகள்

**மானாவாரிக்கு ஏற்ற இரகங்கள். (CJ1)**

**நடவு செய்யும் முறை மற்றும் பருவம் :** செப்டம்பர் முதல் டிசம்பர் மாதம் வரை நன்கு வளர்ந்த நாற்றுகளை வரிசைக்கு வரிசை 5அடி இடைவெளியும், செடிக்கு செடி 4அடி இடைவெளி விட்டு 1அடி ஆழம், 1அடி அகலம் உள்ள குழி பறித்து நட வேண்டும்.

**களை எடுத்தல் :** நடவு செய்த பின்பு 3 முதல் 9 மாதம் வரை களை எடுத்து மண்ணை கொத்தி விடுதல் வேண்டும்.

**உரமிடுதல் :** நடவு செய்த பின்பு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஏக்கருக்கு 100 கிலோ 17:17:17 கலப்பு உரம் மூன்று முறை இடவும்.

**கவாத்து செய்தல் :** வளரும் மரத்தில் மூன்றில் ஒரு பகுதிக்கு கீழ் உள்ள கிளைகளை கவாத்து செய்தல் வேண்டும். முதல் வருட முடிவிலும் , இரண்டாம் வருட முடிவிலும் இருமுறை கவாத்து செய்வது அவசியம். கவாத்து செய்யும்போது மரமோ பட்டையோ சேதம் அடையாமல் கவனமாக செய்ய வேண்டும்.

**ஊடுபயிர் :** சவுக்கு நடவு செய்த பின் வரிசைகளுக்கு இடையில் நிலக்கடலை, எள், தர்பூசணி மற்றும் பயிறு வகைகளை முதல் நான்கு மாதங்களில் ஊடுபயிராக பயிர் செய்து நல்ல லாபம் பெறலாம்.

**மகசூல் :** நன்கு வளர்ந்து முதிர்ச்சி அடைந்த 4 முதல் 5 ஆண்டுகளில் அறுவடை செய்யலாம். மண்ணின் தன்மை மற்றும் பராமரிப்பு முறைகளை பொறுத்து ஒரு ஏக்கருக்கு சராசரியாக 40 முதல் 60 டன் மகசூல் கிடைக்கும்.



**மானாவாரியில் சவுக்கு சாகுபடி செய்து அதிக மகசூல் பெற்ற சிறந்த விவசாயி**

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், கீழ்சித்தாமூர் கிராமத்தை சேர்ந்த திரு.முருகப்பெருமாள் தங்கவேல் (தொலைபேசி எண்: 9865412767)என்பவர் தன்னிடம் உள்ள 40 ஏக்கர் நிலத்தில் சுமார் 12 ஏக்கரில் 2014–15 ஆம் ஆண்டு டி.என்.பி.எல் நிறுவனத்தின் பண்ணைக்காடுகள் திட்டத்தில் CJ1 சவுக்கு நாற்றுகளை வாங்கி பயிர் செய்தார். அவர் டி.என்.பி.எல் களப்பணியாளர்களின் அறிவுரையின்படி மேற்சொன்ன அனைத்து பராமரிப்பு முறைகளையும் மேற்கொண்டு நான்கு வருடம் கழித்து அறுவடையின் போது ஏக்கருக்கு சுமார் 60டன் மகசூல் பெற்றார். அதனுடன் ஊடுபயிராக முதல் நான்கு மாதங்களில் உளுந்து சாகுபடி செய்து ஏக்கருக்கு சுமார் 600Kg மகசூல் பெற்றார். அவர் சாகுபடி செய்ததில் ஒரு ஏக்கருக்கான வரவு, செலவு மற்றும் நிகர இலாப விவரங்களை இங்கு பகிர்ந்துள்ளார்.





| எண் | விவரங்கள் | பயிர்வகைகள் சவுக்கு | உளுந்து |
|---|---|---|---|
| 1 | பயிரிடப்பட்ட காலம் | நவம்பர் 2014 | நவம்பர் 2014 |
| 2 | அறுவடை காலம் | ஜனவரி 2019 | பிப்ரவரி 2015 |
| 3 | மகசூல் விவரம் ஏக்கருக்கு | 60 டன் | 600 கிலோ |
| 4 | சந்தை விலை | ரூபாய் 5575 / டன் ஒன்றுக்கு | ரூபாய் 55 / டன் ஒன்றுக்கு |
| 5 | ஒரு ஏக்கருக்கு மொத்த வருமானம் | Rs. 334500+33000 = Rs.367500 | |
| 6 | ஒரு ஏக்கருக்கு மொத்த செலவு | Rs. 120500+1500 = Rs.122000 | |
| 7 | ஒரு ஏக்கருக்கு நிகர லாபம் | Rs. 214000+31500 = Rs.245500 | |

## நீர் மேலாண்மையில் டி.என்.பி.எல். வனத்தோட்டத்துறை

பாரதபிரதமர் மாண்புமிகு திரு.நரேந்திரமோடி அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு மாநில அளவில் நடைபெற்ற ஜல்சக்தி அபியான் (Jai Sakthi Abhiyan) நீர் மேலாண்மை திட்ட விழிப்புணர்வு முகாம்களில் இதர அரசு துறைகளுடன் இணைந்து டி.என்.பி.எல் வனத்தோட்டத்துறை பங்கு பெற்று நீர் மேலாண்மை மற்றும் மழை நீர் சேமிப்பின் அவசியத்தை விவசாயிகள், சுயஉதவி குழுக்கள் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு வலியுறுத்தியது.

மாவட்ட வாரியாக நடைபெற்ற இக்கருத்தரங்குகளில் மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் வேளாண்மைத்துறை வேளாண் விஞ்ஞானிகள், அலுவலர்கள், சுய உதவிக்குழுக்கள், விவசாயிகள் மற்றும் கல்லூரி மாணவர்கள் பங்கு பெற்றனர். டி.என்.பி.எல் சார்பாக நிறுவனத்தின் வனத்தோட்ட உதவி மேலாளர்கள் மற்றும் களப்பணியாளர்கள் கலந்து கொண்டு வேளாண்காடுகள் பற்றியும் மழைநீர் சேமிப்பு பற்றியும் தக்க ஆலோசனைகளை வழங்கினர். மேலும், நமது நிறுவனம் இந்த முகாம்களில் மரக்கன்றுகளை இலவசமாக வழங்கி பொது இடங்களில் நடவு செய்து வனப்பரப்பை அதிகப்படுத்த உதவி வருகிறது.

## நமது டி.என்.பி.எல் நிறுவனம் வேளாண் அறிவியல் மையங்களுடன் இணைந்து நீர் மேலாண்மை மற்றும் மழை நீர் சேகரிப்பின் அவசியத்தை எடுத்துரைத்த நிகழ்வுகளின் தொகுப்பு



வேளாண் அறிவியல் மையம் - செய்யார், நாள் - 03.09.2019



வேளாண் அறிவியல் மையம் - புழுதேரி நாள் - 19.09.2019



வேளாண் அறிவியல் மையம்-பெரம்பலூர், நாள் - 03-09-2019

# டி.என்.பி.எல் புதிய வீரிய தைலமர குளோனல் இரகங்கள் வெளியீடு

டி.என்.பி.எல் மூலதன காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள் திட்டத்தில் விவசாயிகள் அதிக மகசூல் பெறுவதற்காக புதிய இரகங்களை உருவாக்கும் முயற்சியில் நமது வனத்தோட்ட ஆராய்ச்சி துறை மூலமாக பல்வேறு ஆய்வுகளை கடந்த 10 வருடங்களாக மேற்கொண்டு வருகிறது. இதற்காக ஆஸ்திரேலியாவில் உள்ள CSIRO விதை உற்பத்தி மையத்திலிருந்து 2009 மற்றும் 2010ம் ஆண்டுகளில் 9 வகையான தைலமர சிற்றினங்களின் சிறந்த தாய்மரங்களிலிருந்து பெறப்பட்ட 36 தனி மர விதைகளை இந்திய வேளாண் அறிவியல் மையத்தின் மூலமாக (ICAR) இறக்குமதி செய்து டி.என்.பி.எல் ஆராய்ச்சி மையத்தில் விதை நாற்றுக்களை உருவாக்கி அதனை தமிழகத்தின் பல்வேறு தட்பவெப்ப மண்டலங்களில் ஆராய்ச்சி தோட்டங்களில் நடவு செய்யப்பட்டது. சிறந்த பண்புள்ள மரங்களை தேர்வு செய்து, இளந்தளிர்கள் மூலம் குளோனல் முறையில் அதிக அளவில் நாற்றுகளை உற்பத்தி செய்து பல்வேறு வேளாண் தட்பவெப்ப மண்டலங்களில் நடவு செய்து ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டது.

இந்த புதிய குளோனல் இரகங்களை தற்போது பயிரிடப்படும் மிகச்சிறந்த குளோனல் இரகங்களோடு ஒப்பீடு செய்து அதைவிட 20 சதவீதம் அதிக மகசூல் உள்ள மூன்று தைல மர குளோனல் வீரிய ரகங்களை (**TNPL 191, TNPL 192** மற்றும் **TNPL 193**) தேர்வு செய்து TNPL நிறுவனம் வெளியிட்டுள்ளது. இவற்றில் TNPL 191 மற்றும் 193 மானாவாரி சாகுபடிக்கும், TNPL 192 நல்ல பாசன வசதி மற்றும் அதிக மழைப்பொழிவு உள்ள இடங்களுக்கு ஏற்ற இரகங்களாகும். இந்த மூன்று ரகங்களும் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக கடந்த 22.06.2019 அன்று தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் திரு.S.சிவசண்முகராஜா, இ.ஆ.ப., அவர்களால் வெளியிடப்பட்டது. விவசாயிகள் இந்த உயர் ரகங்களை நடவு செய்து பயன்பெற அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.



# அதிக மகசூல் பெற்ற விவசாயிகளை கவுரவித்தல்

TNPL நிறுவனத்தில் பண்ணைக் காடுகள் திட்டம் 4 மண்டலங்களாக பிரித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் ஒவ்வொரு மண்டலத்திலும் அதிக மகசூல் அறுவடை செய்த சிறந்த விவசாயிகளுக்கு மேலாண்மை இயக்குனர் அவர்கள் பரிசு வழங்கி பாராட்டினார்.




# வனத்தோட்ட குறுந்தகடு வெளியீடு

டி.என்.பி.எல் நிறுவனம் கடந்த 2004 – 05ம் ஆண்டு முதல் பண்ணைக்காடுகள் திட்டத்தை விவசாயிகளுக்காக செயல்படுத்தி வருகிறது. கடந்த 14 ஆண்டுகளில் இத்திட்டத்தில் 27,596 விவசாயிகள் இணைந்து 1,46,436 ஏக்கர் பயிர் செய்துள்ளனர். இவர்களுக்கு உதவும் வண்ணம் வனத்தோட்டத்துறையின் கள அலுவலர்கள் மூலமாக இலவச தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் கூழ்மர அறுவடைக்கான உதவிகளை செய்து வருகின்றது. இதன் ஓர் அங்கமாக TNPL வனத்தோட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப தகவல்கள் அடங்கிய வனத்தோட்ட குறுந்தகடினை விவசாயிகள் பயன்பெறும் வகையில் நமது நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் வெளியிட்டார்.



# மரம் வளர்ப்போர் விழா




மேற்கண்ட செயல்பாடுகளின் தொடர்ச்சியாக டி.என்.பி.எல் வனத்தோட்டத்துறை கோவையை சேர்ந்த மத்திய அரசாங்கத்தின் வனமரபியல் மற்றும் வனப்பெருக்க நிறுவனத்துடன் இணைந்து மண்டல வாரியாக மரம் வளர்ப்போர் விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் முத்தான முதல் மரம் வளர்ப்போர் விழா 22.10.2019 அன்று அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தில் நடந்தது. அதேபோல் புதுக்கோட்டை, விழுப்புரம் மற்றும் கரூர் மாவட்டங்களில் அடுத்தடுத்த மாதங்களில் நடத்த திட்டமிட்டுள்ளது.

இவ்விழாவில் மரப்பயிர் சாகுபடி செய்வது பற்றியும், அதன் மேலாண்மை பற்றியும் அந்தந்த துறைகளின் தலை சிறந்த விஞ்ஞானிகள் விளக்கவுரை ஆற்ற உள்ளார்கள்.எனவே இவ்விழாவில் அனைத்து விவசாயிகளும் பங்கு பெற்று பயனடையுமாறு டி.என்.பி.எல் வனத்தோட்டத்துறை இந்த செய்திமடல் மூலம் கேட்டுக்கொள்கின்றது.

## டி.என்.பி.எல் வனத்தோட்டத்துறை மண்டல ஆலோசனை மையங்கள்

தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து மாவட்ட விவசாயிகளுக்கும் மிகச்சிறந்த அளவில் சேவையளிக்கும் வகையில் நமது நிறுவனத்தின் வனத்தோட்டத்துறை பின்வரும் நான்கு மண்டல அலுவலகங்களை செயல்படுத்தி வருகிறது.

| மண்டலம் | மாவட்டம் | கைபேசி எண் |
|---|---|---|
| வடக்கு | காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், பாண்டிச்சேரி | 9442591437<br>04146 224035 |
| மேற்கு | கரூர், நாமக்கல், ஈரோடு, திருப்பூர், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, கோயமுத்தூர் | 9442591430<br>9442591438 |
| கிழக்கு | அரியலூர், பெரம்பலூர், திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், காரைக்கால் | 9442591417<br>04331 252360 |
| தெற்கு | கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை | 9442591433<br>04322 261225 |

இங்கு உள்ள மண்டல மேலாளர்கள், அலுவலர்கள் மற்றும் நன்கு பயிற்சி பெற்ற களப்பணியாளர்கள் மரப்பயிர் மூலம் அதிக மகசூல் பெறுவது குறித்து விவசாயிகளுக்கு தக்க ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர். எனவே விவசாயிகள் தங்கள் பகுதிகளுக்கு உண்டான டி.என்.பி.எல் வனத்தோட்டத்துறை மண்டல அலுவலகங்களை தொடர்பு கொண்டு பலன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்த வனத்தோட்ட மலர் குறித்த தங்கள் மேலான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கீழ்கண்ட முகவரிக்கு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவும்.

வனத்தோட்டத்துறை
தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்

காகிதபுரம்
கரூர் மாவட்டம் – 639 136
மின்னஞ்சல் – plantation@tnpl.co.in
வாட்ஸ்அப் எண் – 9442591419